1982 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அப்படி எந்தத் தகவலும் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, பி.எஸ்.ஸி. (அக்ரி) மற்றும் பி.இ. இவைகள் டெக்னிக்கல் குவாலிபிகேஷன்களாக இருப்பதால் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பொருத்த வரையில் அதை முடிவு செய்வதற்கு அங்கே ஒன்றுமே இல்லை. ஏனெனில் அவர்கள் ஃபுல்லி குவாலிபைடு' ஆனவர்கள். எனவே ஒரு சீனியாரிட்டி பேசிசில் அவர்களை அப்பாயின்ட் செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அப்படித்தான் இப்போது ஏற்பாடு செய்யப்படுகிறது.

தமிழகத்தில் கோதுமை பயிரிடுதல்

*வினா எண். 32—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கோதுமை பயிரிடுவதில் அரசு என்னென்ன முயற்சிகள் கொண்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தமிழகத்தில் சுமார் 1,500 ஹெக்டேர்களில் கோதுமை பயிரிடப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதியில் கோதுமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளாக பயிரிடப்படுகிறது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 1,500 ஹெக்டார் நீலகிரி மாவட்டத்தில் இது பயிரிடப்படுவதாகச் சொன்னார்கள். நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதியில் பயிரிடப்படுவதற்குக் காரணம், அங்கே இருக்கின்ற தண்ணுமை நிலை, குளிர்காற்று இருக்கிறது. அதேபோன்று குமரி மாவட்டத்தில் மேற்குப் பகுதியிலும், கோவை மாவட்டத்தில் சில பகுதிகளிலும், ஹோசூர் போன்ற பகுதிகளிலும் இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே. இப்போது கோதுமையை விட இன்றியமையாத சில விளைபொருள்களை நாம் விளைவிக்கின்ற நிலைமையிலே இருக்கிறோம், ஆகவே நீலகிரி மாவட்டத்தில் இருப்பதே போதும் என்று கருதுகிறேன்.

[1982 பிப்ரவரி 4

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு மக்களுக்கு நமது பங்கீட்டுத் துறை மூலமாக அளிப்பதற்கு 10,800 டன்கள் கேட்கிறபோது, 4,000 டன்கள்தான் கொடுக்கப் படுகிறது. ஆலைகளுக்கு 65,000 டன்கள் வேண்டுமென்று கேட் டால் 30 ஆயிரம் டன்கள்தான் கொடுக்கிறது. ஆகவே, 41,800 டன்கள் நமக்குத் தேவையிருக்கிறபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை பல இடங்களுக்கு விஸ்தரிப்பது தேவை என் பதையும், இது விவசாயிகளுக்கு உற்சாகம் ஊட்டும் என்பதையும் உணர்ந்து, அதற்காக மானியம் கொடுக்க அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மத்திய அரசு கேட்டதைக் கொடுக்கவில்லை என்ற காரணத்தால் இங்கே விளைவிக்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபடக் கூடாது. உரிமையை மீண்டும் வற்புறுத்திக் கேட்க வேண்டுமே தவிர, மனம் உடைந்து விடக்கூடாது.

திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 1,500 ஹெக்டேர் பரப்பளவில் கோதுமை பயிரி டப்படுகிறது என்று சொன்னார்கள். அந்த 1,500 ஹெக்டேர் பரப்பளவில் எந்த ரக கோதுமையைப் பயிரிடுகிறார்கள் என்பதை அறியவிரும்புகிறேன். பஞ்சாபில் இருந்து இப்போது புதிதாக வந்து இருக்கக்கூடிய ஹைபிரிட் பயிரிடுகிறார்களா அல்லது பழைய சம்பா கோதுமையைப் பயிரிடுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எச். டபிள்யூ. 517 என்கிற ரகம் பயிரிடப்படுகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதுமை பயிரிடுவதற்கு முடியாது என்றும், ஏனென்றால் இன்றியமை யாத மற்ற பயிர்கள் அங்கே பயிரிடுவதற்கு திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். என்னென்ன மற்ற பயிர்கள் அங்கே போடு வதற்குத் திட்டமிடப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே. ஏற்கனவே செம்பனை, முந்திரி போன்றவை பற்றிச் சொல்லி இருக்கிறேன். இப்படித் தொடர்ந்து எல்லாப் பயிர்களையும் அந்தக் கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிரிட வேண்டும் என்று விரும்பினால் பரப்பளவு போதாது.